# பொன் வித்யாஷ்ரம் குழுமப் பள்ளிகள்

## ஜனவரி மாத பாடப்பகுதிகள்

வகுப்பு: மூன்று

தலைப்புகள்:

* முயற்சி வெல்லும்
* அறிவூட்டும் தொலைக்காட்சி
* நல்வழி
* ஒருமை பன்மை

Activity:

ஒருமைக்குரிய பன்மைச் சொற்கள் ஏதேனும் 10 எழுதி வருதல் (A4 sheet)

Scanned with OKEN Scanner

# முயற்சி வெல்லும்

## I. வினா - விடை

1. ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?

ஆசிரியர் அறிவித்த போட்டி பெட்டியைத் தூக்குதல் என்பது ஆகும்.

2. மாணவர்கள் பலரும் போட்டியிலிருந்து ஏன் விலகினர்?

பெட்டி அளவில் பெரியதாக இருந்தது. அதனால் தங்களால் தூக்க இயலாது என்று மாணவர்கள் பலரும் போட்டியிலிருந்து விலகினர்.

3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

கவியரசியின் வெற்றிக்குக் காரணம் அவளது முயற்சி ஆகும்.

# அறிவூட்டும் தொலைக்காட்சி

## I. வினா-விடை

1. பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் எதைக் கண்டனர்?

பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் வானூர்தி ஒன்று பறப்பதைக் கண்டனர்.

2. இடி, மழை வந்தால் மரத்தடியில் ஏன் ஒதுங்கி நிற்க கூடாது?

இடி, மழை வரும் போது மரத்தடியில் நின்றால் இடிதாக்கி உயிர்களுக்கு பேராபத்து ஏற்படும். அதனால் மரத்தடியில் ஒதுங்கி நிற்கக் கூடாது

3. நீங்கள் தொலைக்காட்சியில் பார்க்கும் நிகழ்ச்சிகள் எவை?

தொலைக்காட்சியில் பார்க்கும் நிகழ்ச்சிகள்:

* பொம்மைப் படங்கள்
* விளையாட்டு நிகழ்ச்சிகள்
* செய்து பார்ப்போம்

Scanned with OKEN Scanner

# நல்வழி – செய்யுள்

## I. வினா - விடை:

1. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?

நல்வழி என்னும் நூலை எழுதியவர் ஔவையார்.

2. உலக மக்களுக்கு உணவாய் அமைவது எது?

உலக மக்களுக்கு உணவாய் அமைவது ஊற்றுநீர் ஆகும்.

3. நல்ல குடிப்பிறந்தாரின் இயல்பு எத்தகையது

நல்ல குடிப்பிறப்பில் தோன்றியவர்கள், வறுமைநிலையில் வாடினாலும், தம்மிடம் வந்து பொருள் தருக எனக் கேட்பவர்க்கு இல்லை எனக் கூறாமல் தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவுவார்கள்.

Scanned with OKEN Scanner

# இலக்கணம் ஒருமை – பன்மை

I. ஒருமைக்குரிய பன்மைச் சொல்லை எழுதுக.

| ஒருமை | | பன்மை |
|---|---|---|
| 1. பந்து | – | பந்துகள் |
| 2. ஆமை | – | ஆமைகள் |
| 3. முயல் | – | முயல்கள் |
| 4. பூனை | – | பூனைகள் |
| 5. பூ | – | பூக்கள் |
| 6. விழா | – | விழாக்கள் |
| 7. பசு | – | பசுக்கள் |
| 8. வினா | – | வினாக்கள் |
| 9. படம் | – | படங்கள் |
| 10. மரம் | – | மரங்கள் |
| 11. சிங்கம் | – | சிங்கங்கள் |
| 12. காகம் | – | காகங்கள் |
| 13. பல் | – | பற்கள் |
| 14. கல் | – | கற்கள் |
| 15. சொல் | – | சொற்கள் |
| 16. புல் | – | புற்கள் |

Scanned with OKEN Scanner